மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 09/2021 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | வசந்தி | நாள் | 20.01.2025 |
| கணவர் பெயர் | மகேந்திரன் | | |

**1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-**

1) 1ம் பிரதிவாதி மாதையன் என் மாமனார் என்றால், சரிதான். 2ம் பிரதிவாதி என் மாமியார் என்றால், சரிதான். 3, 4 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால், என் கணவரின் சகோதரர்கள் ஆவர். மேற்படி உறவுமுறை குறித்து என் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால், சரியல்ல. சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு எந்த உறவுமுறை குறித்தும் நான் சொல்லவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

2) என் வழக்கில் நான் ஒரு குமரேசனின் வாரிசுதாரர் என சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. என் கணவர் பெயர் மகேந்திரன் அவர் இறந்துவிட்டார். நான் அவருடைய வாரிசுதாரர் என தான் சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், என் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிக்கு முரணாக தற்போது வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. என் சொந்த ஊர் என்னவென்றால், வெடிக்காரனூர் ஆகும்.

3) நானும், என் கணவரும் காதல் திருமணம் செய்து கொண்டோம் என்றால், சரியல்ல. மேற்படி எங்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணமா என்றால், ஆமாம். அவ்வாறெனில் எங்களது திருமண பத்திரிக்கை எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அது குறித்து எனக்கு சரியாக நினைவில்லை.

4) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணம் திருமண பதிவு சான்றிதழ் என்றால், சரிதான். நான் காதல் திருமணம் செய்ததால்தான் என் திருமணத்தை பதிவு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால், B.Com., ITI படித்துள்ளேன். தற்போது நான் என்ன வேலை செய்கிறேன் என்றால், அரசு தொழில்நுட்ப கல்லூரியில் தொழில்நுட்ப கூட பணிமனை போதகராக பணியாற்றி வருகிறேன். நான் அரசு பணி செய்து வருகிறேன் என்றால், சரிதான்.

5) எனக்கு திருமணம் செய்து எங்கு குடியிருந்தேன் என்றால், வெடிக்காரனூரில் குடியிருந்தேன். நான் கணவாய் காட்டில் வசிக்கவில்லை என்றால், சரியல்ல. கணவாய் காட்டிலும் வசித்தேன். கணவாய் காட்டிற்கும், வெடிக்காரனூருக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும். 1ம் பிரதிவாதிக்கு ஒரு ஓட்டு வீடும், ஒரு குடிசை வீடும் உள்ளது என்றால், சரிதான். 1ம் பிரதிவாதியின் வீடு வசதியான வீடு அல்ல என்றால், சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் மேற்படி சாலை வீட்டில்தான் குடியிருந்தனர் என்றால், சரிதான்.

6) நான் குடிசை வீட்டில் வசிக்க இயலாது என கூறி, என் கணவருடன் அடிக்கடி தகராறு செய்துவந்தேன் என்றால், சரியல்ல. என் கணவர் டாஸ்மார்க் நிறுவனத்தில் விற்பனையாளராக பணியாற்றி வந்தார் என்றால், சரிதான். என் கணவர் என்னை கணவாய் காட்டிலுள்ள ஓட்டு வீட்டில் அழைத்து வந்து அங்கு குடி வைத்தார் என்றால், சரிதான். அந்த சமயத்தில் 1, 2 பிரதிவாதிகளும், இதர பிரதிவாதிகளும் மேற்படி ஓட்டு வீட்டை ஒட்டியுள்ள குடிசை வீட்டில் வசித்து வந்தனர் என்றால், சரிதான்.

7) 3ம் பிரதிவாதி குமரேசனுக்கு எங்களுக்கு முன்பு திருமணம் ஆகிவிட்டதா என்றால், ஆமாம். மேற்படி குமரேசன் 1, 2 பிரதிவாதிகளுடன் வசித்து வந்தார் என்றால், இல்லை. திருப்பூரில் தங்கி பணிசெய்து வந்தார். என் கணவர் மகேந்திரன் 1ம் பிரதிவாதிக்கு எத்தனையாவது மகன் என்றால், 2 வது மகன் ஆவார்.

(1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஓம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.